# சுப்புத்தேவர் கும்மிப்பாட்டு

பதிப்பாளர்
**த. கனிதா**

நெறியாளர்
**வீ. அரசு**
பேராசிரியர்

**தமிழ் இலக்கியத்துறை**
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை-600 005.
2011

# சுப்புத்தேவர் கும்மிப்பாட்டு

**"சுவடியியலும் பதிப்பியலும்"**
பட்டயப்பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பாளர்
**த. கனிதா**

நெறியாளர்
**வீ. அரசு**
பேராசிரியர்

**தமிழ் இலக்கியத்துறை**
சென்னைப் பல்கலைக்கழகம்
பரிதிமாற் கலைஞர் வளாகம்
சென்னை - 600 005

செப்டம்பர் 2011

“சுவடியியலும் பதிப்பியலும்”

2010 - 2011 ஆம் ஆண்டிற்கான

பட்டயப்பேற்றிற்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிவு எண் : 43011052

**வீ. அரசு**
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005

## நெறியாளர் சான்றிதழ்

சென்னைப் பல்கலைக்கழக, சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப்பேற்றிற்காக 2010 - 2011 ஆம் கல்வியாண்டில் **சுப்புத்தேவர் கும்மிப்பாட்டு** எனும் தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இப்பதிப்பேடு என்னுடைய மேற்பார்வையின் கீழ் முதுகலை மாணவர் **த. கனிதா** அவர்களால் அவரின் சொந்த முயற்சியில் உருவாக்கப்பட்டது என்று சான்றளிக்கின்றேன்.

நாள் :

இடம் : சென்னை -5

**(வீ. அரசு)**
நெறியாளர்

**த. கனிதா**
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005

## பதிப்பாளர் உறுதிமொழி

சுவடியியலும் பதிப்பியலும் என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத்துறைக்கு அளிக்கப்பெறும் **சுப்புத்தேவர் கும்மிப்பாட்டு** என்னும் தலைப்பிலான இப்பதிப்பேடு எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும் இது இதற்கு முன்பு வேறு எந்தப் பட்டயத்திற்கும் அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதி அளிக்கின்றேன்.

நாள் :

இடம் : சென்னை -5

**(த. கனிதா)**
பதிப்பாளர்

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | 11 |
| நன்றியுரை | 15 |
| கும்மிப்பாட்டு | 17 |
| பாடல் முதல்குறிப்பு அகராதி | 57 |

# பதிப்புரை

சென்னைப் பல்கலைக்கழகத்தில் உள்ள கீழ்த்திசைச் சுவடி நூலகத்திலிருந்து சுப்புத்தேவர் கும்மிப்பாட்டு என்பது நான் பதிப்பிக்க எடுத்துக் கொண்ட நூல்.

## கும்மிப்பாட்டு அறிமுகம்

கைகளைக் கொட்டி ஆடுவதனைக் கும்மி என்றும் குழுமி என்ற சொல்லிலிருந்து கும்மி என்ற சொல் பிறந்திருக்க வேண்டும். கும்மாளம் என்ற சொல்லுக்கு குதித்தாடுதல் என்ற பொருளும் கும்மாளமிட்டு ஆடுவதனைக் கும்மி எனவும் குறிப்பிடுகின்றனர்.

## கும்மி பற்றிய நூல்கள்

"அகநானூறு" கும்மியை "கொப்பி" எனவும் "சீவகசிந்தாமணி"யில் கும்மியைக் "கொம்பை" என்றும் குறிப்பிடுவதன் மூலம் கும்மி என்ற சொல் மற்ற நூல்களில் இடம் பெற்றிருப்பதைக் காண முடிகிறது.

## கும்மி பற்றி அறிஞர்கள் கூறியவை

"க. சண்முகசுந்தரம்" எனும் அறிஞர் கைகளைக் கொட்டி பெண்கள் ஆடும் ஆட்டமே கும்மி என்று பொருள்படும் என்கிறார்.

"சோமலை" என்னும் அறிஞரின் கருத்துப்படி கும்மி நடனத்துக்கு ஏற்றவாறு கைக்கொட்டியும் பாட்டுப் பாடியும் நடனமாடுவது. கொம்மாய் என்றும் இச்சொல்லிலிருந்து கும்மி என்ற சொல் ஏற்பட்டது என்றும் கூறுகின்றார்.

"கி.வா. ஜகந்நாதன்" கும்மியை 'நன்னன்னா கொட்டுதல்' எனக் குறிப்பிடுகின்றார்.

## கும்மியின் வேறு பெயர்கள்

i) கொப்பி

ii) கொம்மை

iii) கொம்மாய்

iv) நன்னன்னா

v) கொட்டுதல்

ஆகியவைகளாகும்.

## சுப்புத்தேவர் கும்மிப்பாட்டு

இந்தக் கும்மிப்பாட்டினை எழுதியவர் சுப்புத்தேவர். தன் கிராமத்தில் நடந்த நிகழ்வுகளைப் பாடல்களின் வழியாக பதிவு செய்துள்ளார்.

இறைவனை வணங்கி பாடல் தொடங்கப்பட்டுள்ளது. முற்று பெறும் போது இறைவனை வாழ்த்திப் பாடியுள்ளார்.

இதில் கிராமத்தில் இருக்கும் பல்லடம் தாலுக்கா அரசூரைச் சேர்ந்த சுப்பண்ணன், கிராமத்து அதிகாரி, மணியக்காரர், குண்ணியக்கவுண்டன், வெத்திலக்காரன், ராமன் கவுண்டன், பூசாரி, கவுண்டன் மருமகள், முத்தண்ணன், முத்தண்ணனின் மகள் மூதேவி இவர்களுக்கு இடையிலான நிகழ்வுகளைக் கொண்டு பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

**இதில் இடம்பெறும் சாதிப்பெயர்கள்**

i) தேவர்

ii) கவுண்டர்

iii) அகமுடையார் குலம்

**இதில் இடம்பெறும் ஊர்ப்பெயர்கள்**

i) அரசூர் (பல்லடம் தாலுக்கா)

ii) தாளிபாளையம்

iii) செங்கப்பள்ளி

**எழுத்துகள்**

இப்பதிப்பிற்கு எடுத்துக்கொண்ட சுவடியில் எழுதப் பெற்றுள்ள எழுத்துகளில் சில எழுத்துகள் கூட்டெழுத்துகளாக அமைந்துள்ளன. நூலில் பயின்று வரும் எழுத்துகளில் மாற்றங்கள் உள்ளன. கீழே சில எடுத்துக்காட்டுகளைக் காணலாம்.

| | | |
|---|---|---|
| மிரந்த | - | இருந்த |
| வெந்த | - | எந்த |

| | | |
|---|---|---|
| கேழ்க | - | கேட்க |
| சச்சரவு | - | சண்டை |
| துராகிர்த | - | துன்பம் |
| னென்னோடே | - | என்னோடே |
| கேளானுமென்ன | - | கேட்டாலென்ன |
| அல்லோனாயுங் | - | எல்லாத்தையும் |
| குத்தமுரண்டு | - | குத்தகை இரண்டு |
| பிள்ளார் | - | பிள்ளையார் |
| அபாண்டம் | - | பொய் |
| தயாளம் | - | தாராளம் |
| முங்களும் | - | உங்களும் |
| அயமச்சம் | - | அச்சம் |
| இச்சனம் | - | இம்மக்கள் |
| கருப்பத்ரிவள | - | தெரியவில்லை |

இந்த சுவடியில் பாடல் எண் 32 கிடைக்கவில்லை. இதன் தலைப்பில் சுப்புதேவர் கும்மிப்பாட்டு என்றே பதிவாகியுள்ளது. அதை நான் திருத்தி சுப்புத்தேவர் கும்மிப்பாட்டு என்று பதிப்பித்துள்ளேன்.

இதன் பாடல்களை அகராதி முறையில் இறுதியில் சேர்த்துள்ளேன். இந்த பாடல்களில் உள்ள சொற்பிழை, சந்திப்பிழை ஆகியவற்றை நீக்கி பதிப்பித்துள்ளேன்.

# நன்றியுரை

சுவடியியலை பட்டயப் படிப்பாக வைத்துள்ள சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும், முதுகலையில் சுவடி பற்றிய புரிதலையும் மாணவர்கள் பெற வேண்டும் என்று மாணவர்களை ஊக்கப்படுத்தும் தமிழிலக்கியத்துறைத் தலைவரும் எனது சுவடியைப் பதிப்பிக்க அனைத்து நிலைகளிலும் நெறியாள்கை செய்தவருமான பேராசிரியர் வீ. அரசு அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வகுப்பு எடுத்த பேராசிரியர் ய. மணிகண்டன், விரிவுரையாளர் இளங்கோ, லதா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கீழ்த்திசை சுவடி நூலகத்தார்க்கும் சுவடியைத் தேர்ந்தெடுக்க உதவிய ஐய்யனார் அவர்களுக்கும் என் நன்றி.

கணிப்பொறி அச்சு செய்து இப்பதிப்பேட்டை வடிவமைத்துக் கொடுத்த இரா. மோகனலட்சுமி அவர்களுக்கும் என் நன்றி. என் குடும்பத்தார்க்கும் என் தோழிகளுக்கும் என் நன்றி!!!

# சுப்புத்தேவர் கும்மிப்பாட்டு

1.அ. முந்தி முந்தி விநாயகனே சுருளி
முப்பத்து முக்கோடி தேவர்களே
கந்தனுக்கு நல்லா முன் பிறந்தாய்
கச்சிகணபதி முன்னடவாய்
வேலவர்க்கு நல்லா முன் மிரந்த
வெற்றி விநாயகன் முன்னடை வாய்
ஆதிகுலா தெய்வம் கருப்பருயா நீ
அரசவனத்தில் குடியிருக்கும்

ஆ. அரசூரதனில் வாழும் பரமசிவன் மாரி
அம்மனையும் மனதில் நான் நினைத்து
அனுதினம் உன்பாதம் மறவாமலே நானும்
அடிபணிந்து கொண்டு வருகின்றேன் நான்
இரும்பரை கிராமத்தில் சேர்ந்த நல்லா
இக்கரை செங்கப் பள்ளியில் வாழும்
ஆலமரத்தடியில் குடிக்கொண்ட
அண்ணன்மார் தேவர் கவுண்டர்களும்

2.அ. சத்தி பத்தி குறையாத மகமாயி
சாமண்டி வைரவி மாரித்தாயே
உற்ற ஜனங்களை மிக நினைந்து நானும்
பெருமையுடன் கும்மிப் பாடுகின்றேன்
பத்து வயதிலே பள்ளிக் கூடத்திலே
பாங்குடன் பால் கொடுத்தோதி வைத்தா

ஆ. அவரையும் நமக்கொரு குரு வெண்றெண்ணி
நானும் அன்புடனே கும்மி பாடுகிறேன்
எத்திசையும் புகழ்பெற்ற பெரியோர்கள்
ஏழையின் பேரிலே தயவுசெய்து

குற்றங் குறைகள் இருந்தாலும் நீங்கள்
கொண்டு பொருத்து என்னை ரட்சிக் கோணும்
கவிக்கற்ற பெரியோர்கள் முன்பாக
நானும் கண்டு சுத்தி கும்மி பாடுகிறேன்

3.அ. புவிதனில் உள்ள பெரியோர்கள் இதை
பொருத்து ரட்சிக்க வேணுமையா
பாலன் எழுதிய கும்மியிலே கொஞ்சம்
பத்தாம லெச்சாயிருந்தாலும்
தஞ்சமென்று தாள் பணிந்து நானுங்களை
நெஞ்சினில் நினைந்து நான் பாடுகிறேன்
பாவ புண்ணியம் உங்களைச் சேர்ந்தது
பட்சம் வைத்தென்னை ரட்சிக்கோணும்

ஆ. இது வெந்த விதமோ வந்த தடமென்று
எண்ணி மயங்கியே பாருதைங்கோ
பல்லடம் தாலுக்கா அரசூருக்குச் சேர்ந்த
பாதையோரம் தென்னம் பாளையத்தில்
அகமுடையார்குலம் சின்னப்பையத் தேவன்
அவன்மகன் சுப்பண்ண னென்றொருவன்
உலகத்தில் பழிவெண்ணு கவிகள் பாடினதை
ஊரிலுள்ள ஜனம் கேளுங்கைய்யா

4.அ. பாட்டுகள் ஆனதும் பழிகளை வென்றதும்
பாரிலுள்ள ஜனம் கேளுங்கைய்யா
இக்கரைச் செங்கப்பள்ளி கிராமத்திலே
நல்லா எல்லோர் குடிகளும்தான் காணு
கவுண்டர் கோயில் ஆலமரம் புஞ்சை
காடொன்று அவன்பேரால் பட்டையமாம்
அன்பான காடுஅரை வள்ளமாம் அதுக்கு
அரையே வீசம்ரூபாய் பைசா வொண்ணு

ஆ. கிராமத்துக் கதிகாரி மணியக்காரனிடம்
கிராமப் படிக்கு பணம் செலுத்தி
வாரத்துக்கு குடிவேணுமையா வென்று
மணியம் குண்ணிய கவுண்டான கேழ்க
பத்துபேர் குடிகளை வைத்துக் கொண்டு
அந்த பரஞ்சாதி மாரியம்மன் சன்னதிமுன்
வந்த குடியான் பேர்களிலே நீங்கள்
வாரக் குடியொன்று யாருமென்றன்

5.அ. பத்துபேர் குடிகளும் தான்கூடியதிலே
பாங்கான யெழங்காலிக்கெம் பண்ணனை
காடுநீ உழுகாதே! போன தானால்
உனக்கு கடவுக் கிடங்கேடு வருகுமென்று
வரப்போக தடங்களும் இல்லாமல் உனக்கு
வருமடா இடஞ்செலும் என்றார்கள்
பத்துபேர் குடிகளும் சொன்னாலே நானும்
பாவனையாய் உழுது வாரேன் என்றான்

ஆ. கந்தாயக் காரன் முகம்பார்த்து - அந்த
கவுண்டனும் குடிகளும் சொன்னார்கள்
வெத்திலை பாக்குக் கொடுக்கும் படியாக
விவரம் சொன்னான் அந்த மணியக்காரன்
பெரியவர்கள் நீங்கள் கொடுக்க வேணுமென்று
பெருமையுடன் கொண்டு முன்னே வைத்தான்
வாரக்காரன் கையில் கொடுக்கும் படியாக
மணியக்காரன் சொன்னான் குடிகளுக்கு

6.அ. குடிகளில் பெரியவன் செல்லப்பக் கவுண்டனை
கொடுக்கும் படியாகச் சொன்னார்கள்
மாரியம்மனையும் கை முகஞ்சு அந்த
வாரக்குடியானவன் வாங்கிக் கொண்டான்

பிலபங்க வருஷம் புரட்டாசி மாதம்
பிறந்த நாளும் தேதிகவுனமில்லை
உன்காய முள்ளமட்டும் நீயே உழுவென்று
கடக்கவொரு வரும் வேண்டாமென்று

ஆ. இருவரும் கூடியே ஒரு மனதாகவே
இத்தனை பேருக்கு முன்பாக
சண்டை வழக்குகள் இல்லாமல் நீங்கள்
சச்சரவு நேர்ந்துக் கொள்ளாமல்
நாங்கள் சொன்னப்படி நீங்களும் கேட்டு
நன்றாக வாழ்ந்து இருங்கள் என்றார்
பத்துபேருங் கூடி சொன்னபடி கவுன
பத்து வருஷம் அனு போகித்தார்

7.அ. சண்டை வழக்குகள் செய்ததில்லை
அவர்கள் சாவடிக்கு போய் நின்றதில்லை
வாரத்துக் கணக்கிது கூலிசிலவு தள்ளி
வந்த கணக்கிது தானுமென்பான்
அந்த வாரக்குடியானவன் சொன்னபடி
கவனமாசூல் பெற்றுக் கொண்டே யிருந்தான்
இப்படி இருவரும் நடந்து வருகையில்
இதமான மணியகாரனும் தான்

ஆ. கண்களும் மங்கியே மெய்மறந்து அவன்
கணக்கெழுதும் கைகள் தானடுங்கி
மணியம் பண்ண வகையில்லாமல் அவன்
மகன் பேரால் பண்ணுவே னென்றானே
இருக்கப்பட்ட குடியான் பேர்களோடே
இளையகுடி மகனுக்கு செய்வே னென்றான்
மூத்த குடிமகன் ராம கவுண்டன்
மூன்றாம் பாட்டன் பேர் கொண்டவனும்

8.அ. காலிலே. . . ரைகள் போட்டிருப்பான் அந்த
கணும் தெரியாத ராமனுந்தான்
நானிருக்க மணியம் விடுவதில்லை என்று
நடந்தான் கச்சேரியில் பிராதுகளுக்கு
ஆத்தோரம் சிறுமுகை கச்சேரியில் தானும்
அனுமதியுள்ள தாசில்தாரர்
கிருஷ்ணப்பன் அவர்கள் தாசில் வேலை
அதற்கு கீழான முனிசி புஷ்ங்க ராயர்

ஆ. இருவரும் அதிகாரம் பண்ணயிலே அந்த
ராமனும் போயங்கே நின்றல்லவோ
இக்கரை செங்கப் பள்ளி மணியம்குண்ணிய கவுண்டன்
எனைப் பெற்ற தகப்பனுமாக வேணும்
தன்பேரிலுள்ள மணியங்களை அவன்
தலையான குடிமகன் நானிருக்க
இளைய குடிமகன் வெங்கிட்டன் பேராலே
இப்பவே மணியங்கள் செய்வதற்கு

9.அ. நடக்கிது சாமி பேச்சுகள் இப்போ அங்கே
நமக்கு மணியங்கள் வேணுமென்றான்
லாவணக்காரன் சொன்னபடி இங்கே
நடக்கும் போடாவென்று தள்ளிவிட்டார்
படிவிட்டு தாண்டியே வெளியில் வந்து
ராமன்பார்த்து மயங்கியே உட்கார்ந்து
முன்பழக்கமான ஜனங்களைக் கொண்டவன்
முனிசியிடம் போயங்கே பேசும்போது

ஆ. மணியங்களாவது வருத்தமடா உனக்கு
வரவேணும் தகப்பனும் என்றாலும்
அப்படி அவனிங்கே வரதில்லை சாமி
அனுமதி செய்யவே வேணும் மென்றான்

எப்படியானாலும் தொகை நூறு கொடுத்தாலும்
இப்பவே மணியங்களாகு மென்றான்
அப்படியே நானும் கொண்டு வர்ரேனென்று
அவசரமாய் விழுந்தோடி வந்து

10.அ. தாளிபாளையத்தில் கைம்பெண் சாதியவள்
தலையான குடித்தனமதி மக்களும்
மகனுக்கு பெண் கொண்ட விஷயத்திலே
போய்வாங்கி வந்தான் நூறுரூபாய் கடந்தான்
வாங்கின பணம் ரூபாய் முனிசிகை சேரவும்
வளைவில் வந்துமணியம் கேட்டானே
வாசல் பந்தலின் கீழ் கட்டலின் மேலவன்
மயங்கி யிருக்கின்ற வேளையிலே

ஆ. வந்த குடியான பேர்க ளெல்லா மிப்போ
மணியமும் போகுதோ வென்றார்கள்
மணியம் என்ற சத்தம் காதில் விழுந்திட
வாய்காஞ்சப் புலிபோல எழுந்திருந்தான்
காயமுள்ளமட்டும் மணியம் போவதுண்டோ
கையெழுத்துப் போடென்று சொன்னான்
மணியம் கொடுக்க வேண்டா மிப்போ
உன்னிடமகன் வேலைபார்த்து வரட்டுமென்று

11.அ. கையெழுத்து போடுமென்று சொல்லியவனை
கவடமாய் மணியம் வாங்கினார்கள்
கையெழுத்தும்படி அர்ச்சி யெழுதியே
கலெக்டர் துரையிடம் அனுப்பிவைத்தார்
ராமனுக்கே மணியம் கொடுக்கும் படியாக
டாமிஷன் துரையவர் எழுதி விட்டார்
லஞ்சம் கொடுத்த ராமனுக்கே மணியம்
ராஜினாமாப் படி யொப்பி வைத்தார்.

ஆ. மணியங்கள் வந்த விஷயத்திலே யந்த
வகைதுகை தெரியாத ராமனுந்தான்
முன்னே தகப்பனும் குடிகளைக் கூட்டியே
முடிப்புகட்டி சந்தனம் பூசினதை
புதுமணியம் வந்த விஷயத்திலே சந்தனம்
பூசிமுடிப்புகள் கட்டி வைத்தான்
நான் பூசிய சந்தன முடிப்பையும் தள்ளியே
நடத்தினானே நம்மிட கண்ணின் முன்னே

12.அ. கொஞ்ச நாளைக்குள்ளே அவன் மணியமும் போயி
அவன் கூரு கெட்டு திரியவேணுமென்று
வாக்குக் கொடுத்து மரணமடைந்தான்
மகாராஜன் அந்த மணியக்காரன்
மரணமடைந்தபின் மகாராஜனென்று
மணியம் செய்யும் கதை கேளுங்கையா
மணியங்கள் வந்த விஷயத்திலே அந்த
வகைதுகைத் தெரியாத ராமனுந்தான்

ஆ. சோரர் புத்திகளை கேழ்க்கிறதும் அவன்
துர்ச்சனம் ரொம்பவும் செய்யரதும்
சந்தைக் கிரண்டுபணம் வந்தால் போதும்
அவன் ஜாதிஜனமென்று பார்ப்பதில்லை
அடிதடி சண்டைகள் வந்தாலும் அவன்
அடக்கமாய் நால் ரெண்டு வாங்கிறதும்
கன்னங் களவுகள் நடந்தாலும் அவன்
கைப்பொருள் வாங்கி யடக்குறதும்

13.அ. முண்டை தண்டைகளை அடிக்கிறதும்
அவன் மூர்க்கத்தில் நால்ரெண்டு வாங்கிறதும்
அவன் சொன்னபடி நடக்காத குடிகளை
துன்பங்கள் ரொம்பவும் செய்கிறதும்

அவன் எந்த விதங்களைச் சொன்னாலும்
குடிகள் அந்த விதமே நடக்கிறதும்
நடவாதப் போனால் குடிகளை ரொம்பவும்
நஷ்டப்படுத்தவும் செய்கிறதும்

ஆ. மாதுவான குடிகள் இருந்தாலு மவன்
வார்த்தை தட்டி பதில் சொல்வதில்லை
ஆனதினாலே அவனும் சொன்னபடி
அச்சமில்லாமல் நடக்கிறதும்
அப்படியாக கொற்றக் குடிகளானதினால்
அவனும் மணியங்கள் பண்ணலாச்சு
கிராமத்திற் கதிகாரி முனிசீபு மணியம்
கேன வாயந்தச் சாமையனும்

14.அ. இவன் எத்தனை லஞ்சங்கள் வாங்கினாலும்
அந்த பேனவாய் சாமையன் காண்பதில்லை
இந்த அதிகாரம் நம்மளுக்கு
எந்த நாளைக்கும் போரதில்லை என்று
சொந்தமாய் குடிகள் வைத்துக்கொண்டு அவன்
துராகிர்த மணியங்கள் பண்ணையிலே
கிராமத்திலிப்படி செய்குரானே யென்று
கேள்வி யொருவரும் சொல்வதில்லை

ஆ. குடிகளே நான் சொன்னபடிக் கேளுங்கோ
நீங்கள் கோர்வையாய் மூனூதும் ஒன்றாக
பழியானும் நானென்றெத் தேடுகிறேன் நீங்கள்
பத்துபேரும் ஒன்றாய் சேரவேணும்
கவுண்டர் கோயில் பூசாரி அந்த
கைக்கோடி னென்னோடே சொன்னானே
அவுகப்பாரு பூசைகள் பண்ணும் போது
அந்த அகமுடையான் காடு மானியமாம்

15.அ. அதை எப்படி யாகிலும் தனக்குவரும்படி
செய்யென்று சொன்னானே என்னோடெ
உங்கள் மானியத்தில் காடுவிடுவித்தால்
உலகமெல்லாம் பேறு சொல்வே னென்றான்
இது கெப்படியாகவே வேணுமென்று நீங்கள்
எல்லோருங் கூடியே சொல்லு மென்றான்
திருப்படி தேவராடி யென்று பட்டை
எங்கள் சென்னு வந்தது சிலகாலம்

ஆ. நஞ்சன் பழனிமேல் படையனென்று
நடந்து வந்தது தெரியு மென்றார்
பத்துவருஷமாய் வெத்திலக் காரன்
பட்டையம் பெற்று வருகிறானே
கிராமத்திற்கு வந்த நாள்முதல் கொண்டு
அவன் கெட்ட நடத்தைகள் செய்வதில்லை
யாரைக் கண்டாலும் மிகுந்த வணக்கமாய்
அனுசாரியாக இருக்கிறானே.

16.அ. அப்படி யாக்கொற்ற மனிதனுக்கு நாமள்
...... செய்யவும் கூடாதென்றார்
வெத்திலக் காரனுல் உங்களுக்கு இப்போ
வெகுமானம் வருவது வென்ன வென்றார்
அவனாலே வெகுமானம் வருவதில்லை இப்போ
அனுபோக பட்டையம் இருப்பதையும்
சர்க்காரில் விடுதலை செய்வ தெங்களுக்கு
சட்டத்திட்டம் சொல்லு மென்றார்கள்

ஆ. இப்படி நீங்களும் சொன்னாலும் காடு
யென்மதின் படியாகுமோ தான்
கந்தாயம் சுலுவத்தில் ஆதாயம் ரொம்பவும்
கண்டு வந்தவன் விடுவானோ

நீங்கள் ஊரெல்லாம் ஒருமுகம் சேரவேணும்
கலப்பை உழுகாமல் தரிசாகப் போட வேண்டும்
அவன் கொடுக்கப்பட்ட பணம் கந்தாயத்தை நாமள்
குடிமேலே வைத்து குடுப்போ மென்றான்.

17.அ. இப்படி ராமனும் சொல்லவே அங்கே
இருந்த குடிகள் அனைவரும்
எப்போதும் உள்ள வாரக் காரனை
யென்னடா உன் சேதி என்றார்கள்
உங்களுக்கான படி எனக்கு மென்று
உள்ளூருக் கெம்பண்ணன் சொல்லி விட்டான்
எல்லோருமொரு கட்டா யிருங்களென்று சொல்லி
எழுந்திருந்தான் அந்த மணியகாரன்

ஆ. நீ சொன்னபடி தானே ஆகட்டுமென்று
நிச்சயம் சொன்னார்கள் குடிகளெல்லாம்
நடந்த சமாசாரம் சொல்லாதிருக்க தக்கதால்
நம்மனர் பேரில் நஷ்டம் நேரும் என்று
கடையிலே வெற்றிலை விற்றுக் கொண்டிருக்கிற
கந்தயக் காரனிடம் வந்து
பத்துவருஷமாய் உனக்காக நானும்
பாவனையாய் இராது பல னெடுத்தே

18.அ. காடுநாக வேண்டாம் என்று குடிகளுக்கு
செய்திருக்கின் மணியக்காரன்
அவன் சொல்லிய வார்த்தையைத் தட்டிவிட்டால்
நானும் தூரத்திலே குடியேறவும்
குடிகளெல்லாம் அவன் சொற்படிக்கு
எனக்கு கூடவே ஒருதுணை இல்லையென்றான்
இது யாரினுல் வந்தது என்றால் அநியாயம்
என்றும் அறிவுடனே கேட்டபின்

ஆ. மணியக்காரன் செய்த நிபந்தனை யெல்லாம்
மற்றபடி யொருவருக்குமில்லை யென்றான்
என்று சொன்னான் இந்த எழங்காலி
கெம்பண்ணன் என்டத்துடனே தானிருந்து
ஊருக்கு நீவந்து நாளைக்கு நல்லா
உழுகும்படி குடிகள் சேர்த்துக் கொள்ள வேண்டும்
நீ சொன்னபடி தானே சொல்வார்கள்
அந்த பேருக்கெட்ட குடியான பேர்கள்

19.அ. குடிகள் அந்த பள்ளிவாங்க உன்னாலே
முடியாது அதை பார்த்தாச்சு நானும் பார்க்கிறான்
கைகடன் வாங்கின ரூபாய் இரண்டுக்கும்
பத்துவள்ளம் உன் பேரில்
நிலுவை இருப்பதை மறந்து விட்டாரோ
நின்னாலும் நிற்கட்டும் போகுமென்றான்
அப்படியே நானும் மறப்பதில்லை என்று
அனுப்பிக் கொண்டு போனான் கெம்பண்ணன்

ஆ. தலத்துக் குடிகள் அனைவோரும் சேர்ந்து
சந்தைக்கு வந்தார்கள் அனைவோரும்
கண்டநூரில் குள்ளப்பனும் அவன்
தகப்பன் பக்கிரி கவுண்டனும் கூட வந்தார்கள்
காரன் திருமனூரிலே தானும் மகனும்
கெம்பத்திரு மண்ணனும்
தொட்டிய பாளைப்பம் குடியிருக்கும் அந்த
கலியாண குருமண்டபத்துக்கு வந்தார்கள்

20.அ. இந்த மது வானவள் நாலுபேரும்
இனமற்ற ஜனங்களும் சேர்ந்து வந்து
ஊராக வேண்டாமென்று கட்டுப்பாடு சொன்ன
உள்ளூர் மணியக்காரனும் வந்தான்

மாமூலாய் வந்திருக்கப்பட்ட அந்த வகையான
உதிமரங்கள் உகட்டில்
சேரவே வந்து ஒருமுகமாய் ஆனபின்பு
சேர்ந்த குடிகளும் தானிருந்தார்

ஆ. அத்தனை பேருக்கு முன்பாக இந்த அன்பான
சுப்பண்ணன் போயிருந்து
பக்கமிருந்து பதிம்பியல்லை அவன்
பாங்குடனே பழமை பேச லுற்றான்
ஏறுகட்டி உழுக எருதுமில்லை என்றுசொல்லி
என்கையால் ஆகாது என்று சொல்லி
என்காடு உழுகிறதில்லை என்று அந்த
எழங்காலி கெம்பண்ணன் சொல்லிவிட்டான்

21.அ. உங்கள் பண்ணுடி சேற்றின் வாரகாரனாலே
பத்துவருஷம் அனுபோகித்தான்
உன்மனதின் படி வாரக் காரனென்று
உழுகும்படி செய்ய வேணு மென்றான்
எப்போதும் உழுதவன் மாட்டேன் என்று சொன்னால்
என்கையிலாகாது என்று சொன்னான்
மணியக்காரன் சொன்ன உபகாரத்தை
அந்த வந்த குடிகளுக்கு சொல்லும் போது

ஆ. என் கையிலாகாது உன் கையிலாகாது
எவரைக் கொண்டாகிலும் உழு வென்றார்
மானியம் விடுவித்தால் உழுவை களேவென்று
மணிய காரனையும் தான் கேட்டான்
பூசாரி கையினால் விடுவித்துக் கொள்கிறான்
புளிப்பாக பேசு தென்றான்
நடந்த திதிகளும் செய்த கட்டுப்பாடும்
நாமன் சொல்லா வேணுமென்று சொல்லி

22.அ. முனிசீபு மணியம் சாமைய னிடத்திலே
முதைகொண்டு போனது சொன்னதுகட்டு
அறிவில்லாத ராமன் மணியத்துக்கு
இங்கு ஆண்பிள்ளை களுமில்லையடா
எல்லோர் குடிகளும் அவனுக்குள் ளடக்கம்
என்பேச்சு முந்தி நடப்பதில்லை
ஏருமுகப் போனால் தடங்கள் செய்தவரை
இன்னாரென்று கண்டு சொல்லு மென்றான்

ஆ. மற்றபடிக்கே என்னாலே யாகாது
வாரக்குடிகளை சேர்த்து முட்டி
இப்படி நீங்களும் இந்தக் கிராமத்தில்
இதமில்லாத மணியம் பண்ணுங் கென்றார்
கணுசம் தெரியாமல் அவன் செய்த பழியை
நான் மனதின் படியாக பார்ப்பேனென்றான்
நீ எப்படி செய்தாலும் எனக்கென்ன போச்சென்று
இதமான சாமையன் சொல்லி விட்டான்

23.அ. எந்த விதத்திலே நாடுபோகு மென்று
எண்ணியவனும் மனதில் வைத்து
நீங்கள் சத்துவமில்லாத முனிசீப் அதிகாரம்
செத்தவர்க் கொப்பிதெ மென்று சொன்னான்
பக்கப்பாடிருக்கிற குடிகளுக்கு - இந்தப்
பழிகளைச் சொல்லி வரும் போது
நடத்தி(தை)யில் தப்பா செய்யப்பட்டவன் - அவன்
நாங்கள் சொன்னாலும் கேளானுமென்ன

ஆ. அப்படி யானாலுமாகட்டும் நாளை
எப்படியோ வென்று பார்ப்பே னென்றான்
அவன் காடுழுது விதைத்துக் கம்பு விளைந்ததாலே
காசுபணங் காணவேணு மிப்போ

கோனா கிடந்த காடு கொருஞ்சி விளைந்தாலும்
குறைவில்லாமல் பணமிருக்கும் - பழி
வாங்காமல் நானும் விடுவதில்லை பார்த்திரு
நீங்களெல்லோரு. . . . . . வென்றான்

24.அ. பெரியவர்கள் செய்த நிலமையதல்ல - விட்டு
பேதகம் செய்தது மானத்தை . . . . அப்பச்
சொன்ன பேச்செல்லாம் செல்லாமல்
அஞ்சு வருஷம் மனதில் வைத்து
எட்டுநாள் வட்டமும் சந்தைக்குப் போறது
எங்கே போனாலங்கே வருகிறதும்
எல்லாருங் காடுபோல் வெள்ளாமை செய்தாலும்
எனக்குப் பசிவாருமென்று சொல்லி

ஆ. அல்லாருங் கூடவும் சொல்லுறதும்
அதை அம்மனுக்கு முன்செய்யுறதும்
கவுண்டர்கள் சுவாமியைப் பே. . . . தும்
என்முன் கண்டு கொடுக்கோணு மென்கிறதும்
அப்படியவனுமே ஒப்பித்துக் கொண்டு
அனுபோகம் செய்யாமலிருக்கையிலே
காட்டோரம் தோட்டத்துக் காரனுந்தான் - அந்த
கட்டு வார்த்தைக்குள்ளே சேர்ந்த. . . .

25.அ. கவுண்டனூரில் குடியிருக்கு மந்த
கணிசமுள்ளாருடனே ராமனுந்தான்
மணியக்காரனுக்கும் அவனுக்கும் - நல்ல
வார்த்தை வழிக்குள் உண்டாகி
காட்டோரம் தோட்டமிருப்பது போல
கடவுக்கிடஞ்சம் வருகு மென்று
அகமுடையான் காட்டை உழுக வேண்டாமென்று
அல்லோனாயுங் கட்டுப் பண்ணினானே

ஆ. அந்தக் காட்டையுழுது ஜெயிக்க வேணுமென்று
கந்தாயக் காரனிடத்தில் வந்து
ஒப்பாவுப் பேச்சு உன் காட்டை நானும்
தகப்பனாயில்லாமலுழு வேனென்றாள்
ஒப்பாவு பேச்சென்று சொன்னாலும் - உன் பேச்சை
உறுதியாய் நம்பவுங் கூடாதென்றான்
தகப்பனா யில்லாமல் உன் காட்டை நானும்
தரிசுழுகாமலே பார்ப்பேனென்றான்

26.அ. இப்படி முன்னிருந்தாலு மென்காடு
தருசேனடா விழுகுது என்றான்
எப்படியானாலு மென்பழி போகுதா
இப்பவே போயேருகட்டு மென்றான்
ஏருகட்டியவன் வெள்ளாமை செய்யவும்
இதமில்லாத மணியக்காரனு ந்தான்
ஊரு குடிகளை கைவம் பண்ணியே - அவனை
ஒருவனுமாகவே தள்ளி வைத்தான்

ஆ. ஊரு சனமெல்லாம் சாமி கும்பிடவும்
ஒருவனைவர வேண்டா மென்றார்கள்
பாராமலே வைக்கவும் கூடாதென்றும் - அவனை
பொது விடுக்க வேணுமென்றார்
எப்படியானாலும் குடித்தனத்தை நலமா
இறக்கவேணு மென்று மனதிலேண்ணி - அவன்
பட்டியிலுள்ள ஆட்டை திருடியே
பழைய குத்தாரியில் தீயை வைத்து

27.அ. வெத்திலைக்காரன் காடுழுக வென்னை
வெகுவூடு பண்ணினா னென்று சொல்லி
கச்சேரியில் பிராது கண்டு கொடுக்கவும்
கண்கண்ட சாட்சிகளில்லை யென்று

அனுமான குடிகளில்லாத விவ்வூரிலே
ஆண் துணைகளுமில்லை யென்று
குலைமகசூல்த ராமன் முன்னாலே
குடித்தனம் பண்ணுவதில்லை யென்று

ஆ. அவனிட்ட வேளாண்மையை எடுத்துக்
கொடுத்திட்டு எனக்குப் புத்தி வந்ததென்று சொல்லி
குத்தமுரண்டு பணம் கொடுத்து அந்த
கூளேராமனும் போய்ச் சேர்ந்து விட்டான்
காடுளாத குடியை அடக்கி விட்டேனென்று
கண்ட விடமெல்லாம் பேசலுற்றான்
தனக்கு நிகரான போர்களில்லை யென்று
தானினைத்தபடியே பேசுரதும்

28.அ. அவன் எந்த விதங்களைச் சொன்னாலும்
குடிகளந்த விதமே நடக்கிறதும்
நடக்காத போனால் குடிகளை ரொம்பவும்
நஷ்ப்படுத்தவுஞ் செய்யறது
மாதுவான குடிகளிருந்தாலும் அவன்
வார்த்தைத் தட்டி பதில் சொல்வதில்லை
இந்த நடத்தைகள் செய்யுறதை அந்த
எதிரிசுப் பண்ணனும் ஒண்டு வைத்து

ஆ. வாராமல் . . . . பதித்த கண்ணியிலே
கடையெப்போ வந்து சேருமென்று
வா. . . . . . ரம் பூண்டாபழி எப்போதிருத்துவமென்று
வளி பார்த்திருக்கிற தருணத்திலே
அவன் மணியத்துக்கு சேர்ந்த கிராமத்திலே
நல்லா - மாதுவான தொட்டிய பாளையத்தில்
மாதுவான குடி. . . . . .      . . . . . . கவுண்டன்
மருமகள் நல்லாயி என்பவளும்

29.அ. அவள் போட்டிருந்த நகையைத்தான் - கட்டி
ஒரு பொட்டணமாகவே கட்டியல்லோ
உறிச்சட்டியில் போட்டு கதவை மூடிபூட்டி
உள்ளூரு சனத்தோடே தான்கூடி
துந்துமி வருஷம் வய்யாசிமாதம்
துகையான தேதி யிருபத் தொண்ணில
திங்கட்கிழமை யரும்பதைச் சந்தைக்கு
சிலவு கொள்ளா அவளும் போய்விட்டாள்.

ஆ. உள்ளூரிலே குடிதானிருக்கு மந்த
உத்ததைச் சொல்லுற முத்தண்ணனும் அந்த
முத்தண்ணன் பெற்றமூ தேவி செல்லாள்
முடிந்து போட்ட நகையை பார்த்திருந்து
மத்தியானத்திலே தொரப்பையு முறித்து அந்த
வகையுள்ள நகைகளைக் கொண்டு வந்து
தகப்பன் வீட்டுக் கதவடியில் தோண்டிதான்
நேர்த்தியுமாகவே புதைத்து வைத்தாள்.

30.அ. சந்தைக்குப் போன நகைக்காரி வந்து
தலையிலடித்துக் கொண்டே யளுதாள்
வ. . . .திப்பச்சாக் கவுண்டன் தானும் வந்து
வலையனுக் கேயாளும் அனுப்பிவிட்டான்
ஆண்டிவலையனும் யாடிய காவல்காரன்
அவசரமாய் விருந்தோடி வந்து
மணியக்காரனுக்குவாதி சுப்பண்ணனும்
மற்ற குடிகளும் தானிருந்து

ஆ. சட்டிக்குள்ளே கட்டிப்போட்டிருந்த நகையை
சந்தைக்குப் போனவள் வாரத்துக்குள்
கள்ளன் கொண்டுபோன வழியும் தடமும்நீ
கண்டு கொடுக்கோணு மென்றார்கள்

மத்தியானத்திலே போனகளவுக்கு வழியும்
தடமெங்கே பார்பேனென்றான்
தாளாதடமுநீ பார்க்கவேண்டாம் இப்போ
தந்துவிடு நகையென்றார்கள்.

31.அ. காலமே மணியக்காரனை கூப்பிடுங்கோ இதைக்
கண்டறியோமென்று சொன்னார்கள்
மணியக்காரனையுங் கூட்டிவரும் படி
மகனையனுப்பினான் வாதியுந்தான்
காலமே யெல்லோரும் வந்து கூடினார்கள்
களவு போனவாசல் முன்னாலே
வந்தகுடியான பேர்களும் கூடியே
வட்டல்குறி வைத்துப் பார்ப்போமென்றார்

ஆ. வட்டல்குறி யெங்கே போகுதென்று அந்த
வலையனும் வாதியும் குடிகளும் தான்
சேரவேகூடியே ஒருமுக மாயின்மை
சேர்ந்த குடிகளும் தானடந்தார்
வட்டலும் போயிநகை யிருக்கப்பட்ட வாசல்
சேர மணியக்காரன் வந்தான்
முத்துக்கவுண்டனுங் கூடவே நிற்கவே
மோச்சங்கள் வந்தது யென்று சொல்லி

32. ஏடு காணவில்லை

33.அ. நானொரு பாவமுங் கண்டதில்லை வட்டல்
நம்மிடவளவுக்கோ வந்துதென்றார்
ஒப்பாவு சொன்னால விடுவதில்லை களவு
ஒப்பியே யென்றான் அந்த மணியக்காரன்
நானும் பெண்சாதியும் சந்தைக்கு போயல்லோ
நகைபோற வாதியும் கூடவந்தோம்
வந்தது போனது தெரியுமடா உன்னிட
மகள்பேரில்வாதி சமுசிய மென்றான்

ஆ. மணியக்காரனுக்கு வாதி சுப்பண்ணனும்
வந்த குடிகளுகளுந்தானிருந்து
எடுத்த நகையைக் கொடுத்துவிடு செல்லா
யெங்குமனுப் புறதில்லை யென்றார்
அப்படியே நானுமெடுக்கவில்லை யென்று
ஆணைச்சத்தியம் சொல்லுகிறாள்
வாதி மச்சாக்கவுண்டன் நானும் அந்த
மணியக்காரன் கூடச் சொன்னான்

34.அ. சட்டப்படிக்கு வீடு சோதிச்சு
சர்க்காருக் கனுப்பனான் போறேனென்றான்
வாதியு மருமகள் நல்லாளை அப்போ
வழக்கப்படிகுடிகள் சடுதி பார்த்து
முத்துக்கவுண்டனைக்கூட வீட்டில்விட்டு
முடிப்போடே நகை பார்க்கனென்றார்கள்
பூந்து பார்க்கும் போதுகளவு கொண்டுபோய்
புதைத்து வைத்த நகையகப்பட்டது

ஆ. மச்சமெடுத்து முடிப்போடே நகையை
மணியக்காரன் கையில்தான் கொடுத்தான்
வாங்கி முடிப்பையுந்தானவிழ்த்து அந்த
வாதிகுடிகளுக்கு ஒப்பினவைத்து
எடுத்துக்கொண்டு வந்து புதையாமல் நகை
யங்கே வந்தமென்ன வென்றார்கள்
அறியாத புதைகுயிலெடுத்து வந்தேனென்று
அறிவுகெட்ட செயலாற்செய்து

35.அ. வலையனிடத்திலே நகையை ஒப்பிவைத்து
வழக்கப்படி குட்டைபோடு மென்றான்
குட்டை போட்டகைதி செல்லானையிப்பவே
கூட்டிப்போய் மந்தையிலே வையுமென்றார்

வள்ளுவன் ஊட்டோரம் ஊர்மந்தையில் தானும்
வலையனுங் கூட்டிப்போய் வைத்தபின்பு
முன்சீப்புமணியம் சாமையனுக்கு ஆள்
முடுகிவிட்டான் அந்த மணியக்காரர்

ஆ. சேதிகொண்டு போனமாதி கனுமப்போ
செல்லானையுங் குட்டைப் போட்டங்கென்றாக
கலியாணத்த ருப்பிலேயிருந்த சாமையனும்
காரியமிது தானென்றேடி வந்து
ஓடிவந்திருவரும் ஒருமுகமாயு நின்று
உண்மையுடன் கூடிப்பேசினார்கள்
களவுகளையே நன்கு விசாரணை செய்தஒரு
கச்சேரி . . . . தவே வேண்டுமென்றது

36.அ. அரசமரம் பிள்ளார் கல்க்கட்டுமேலே
துணைவோர் குடிகளை வைத்துக்கொண்டு
சாணிமணிய மருமண கவுண்டன் ஆண்டித்
தலையாரி வசமாகக் கொடுத்திருந்த
முடிப்போடே நகைவாங்கி அவிழ்த்துவைத்து - அந்த
முனிசீபு மணியம் சாமையனும்
தோள்வளையல்சத்து தொங்கவிடுங்குச்சு
துலதமுள்ள தங்கத்தாளியென்று

ஆ. கடுக்காய்மணி ரண்டுகுளிச மொண்ணு
அதிலேகால் மோதிரம் நாலுபீலிரண்டு
குத்துருட்டு வெள்ளிமோதிரம் ரண்டு
கோர்வையோடே பவழப்பாசியொண்ணு
தங்கம் வெள்ளிநகை பொருமான மொத்தம்
தலைவண்டிபோய் முப்பதனாயெண்ணு
பட்டியும் ஓலையில் கண்டெழுதிக் கொண்டு
பச்சாக் கவுண்டனைச் சாமையன்தான்

37.அ. களவு போனநகை கஸிது தானே யின்னம்
காணப்பட்டமுதலு முண்டோ வென்றார்
பட்டிபிரிச்ச நகையெழுதச்சாமி
பய்யன்கால் தண்டைகளில்லை யென்றான்
களவு கொண்டுபோன செல்லாளைக் குடிகள்
கால்த்தண்டையென்றுமே கேட்டதற்கு
அக்கரை செங்கப்பள்ளி குடியிருக்குமந்த
ஆசாரிசின்னத் தட்டானுக்கு நான்

ஆ. ஒருவரும் அறியாமல் கொண்டபோய் நானும்
ஒருரூபாய் கிறையமாய் கொடுத்தேனென்றான்
அப்பவே ஆண்டிவலையனை விட்டந்த
ஆசாரியைக் கூட்டிவரச் சொன்னார்கள்
கொண்டுவந்து ஆசாரியைத் தானும்
கூட்டத்திலே நிறுத்தியே கேட்கும்போது
அம் பவுங்கைதி செல்லாளும் அந்த
ஆசாரிக்கேத்தானவை கொடுத்தே னென்றான்

38.அ. எப்போதும் நீங்கள் கண்டதுண்டோ நானும்
இந்த . . . . . . த்தியுஞ் செய்கிறத்தை
அப்படியுந்தண்டை வாங்கியிருந்தாலும்
அவள் . . . . . டையெனக்குமே டே . . . . கென்றான்
எப்படிச் சொன்னாலும் தண்டைநீ கொடுக்கோணும்
இ . . . . மடா ப. . . . ரவி யென்றார்கள்
அப்படியா கட்டுமென்று சொல்லியவனும்
அல்லாருங் கூடவே தானிருந்து

ஆ. முனுசீப்புமணியம் சாமையனும் முத்துக்
கவுண்டனையுங் குட்டை போடுங்கென்றான்
கொடுக்கிறேன் கேட்டதை குடியானபேர்களே
குட்டைபோடாமல் நிறுத்துங்கென்றான்

குடிகளும் முத்துக்கவுண்டனுமந்த
கூறுகெட்ட மணியம் ரெண்டுபேரும்
ஒருமுகப்பட்டுமே பேசியல்லோன கதியை
உருதலைக்கேத்தமை செய்து கொண்டார்

39.அ. ஆசாரி சின்னத்தட்டானாலே கொஞ்சம்
அய்வீசு பண்ணுவோ மென்று சொல்லி
கைதிசொன்னது காயமடா நீயும்
கச்சேரிக்குப் போகவேணு மென்றார்
இவள்என்பேரில் அபாண்டம் சொல்லுறது
இது எவர்செய்த போதனையோ
தெரியாதென்றான்
வாங்கினதும் கிறையம் கொடுத்ததுமில்லை நான்
வலுக்கார முண்டானால் செய்யுங் கென்றான்

ஆ. இவன் காடொன்று கொடுப்பதைக்
காணோமென்று
அந்தக் கணிசம் தெரியும் மணியக்காரன்
உன்வீடு சோதனை நாளைக்கடா தட்டாமல்
ஊர்மேலே போகவும் கூடாதென்றார்
எப்போவந்து நீங்கள் சோதனை செய்தாலும்
எனக்கொரு பயங்களுமில்லை யென்றான்
இருட்டுகளாச்சுது எழுந்திருங்கோவென்று
எல்லோருங் கூடியே தானடந்தால்

40.அ. அல்லாருங்கூடியே வந்தல்லோ அங்கே
அருணாசலம் புலவன் திண்ணையில் தான்
மணியக்காரர்களுந் தானிருக்க அங்கே
வந்த குடிகளும் தானிருந்தான்
வலையனும் கைதியை வைத்துக் கொண்டிருக்கவே
மற்ற குடிகளு முத்தண்ணன்
மணியக்காரனையனும் பித்துக்குணவென்று
மற்ற குடிகளின் சொல்படிக்கு

ஆ. கையிலேரூபாய் அஞ்சனாயும் போக
கடனாக வாங்கினான் பதினாலனா
உள்ளூரிலே குட்டி கருமாண்டக் கவுண்டனும்
ஒன்பதனா ரூபாய் தான் கொடுத்தான்
அம்மாசைக் கவுண்டன் மருமகளிடத்திலே
அஞ்சு ரூபாய்க் கடன் தான் வாங்கி
கூடியதுகைகளும் இருபது ரூபாயும்
கொண்டு வந்து கொடுத்தான் முத்தண்ணனும்

41.அ. முத்துக்கவுண்டனால் இருபது ரூபாயும்
முடிப்பாக வாங்கியே கட்டிக்கொண்டான்
லஞ்சங்கள் வாங்கின விசையத்திலே
சாமையன் நகைபட்டிகை சோரவிட்டு விட்டான்
கைவிட்டுப்போன பட்டியும் தானதை
கண்டெடுத்துக் கொண்டான் சுப்பண்ணனும்
மணியக்காரனும் வாங்கிக் கொண்டு பணத்தை
வந்த குடிகளைப் பார்த்துச் சொல்வார்
வாங்கச் சம்மதமோ இல்லையோ வென்று
வந்த குடிகளைக் கேளுமென்றார்
பத்துப்பேருக்குந் தெரிந்த படியெனக்கு
பையன் கால்தண்டை வரவேணு மென்றார்

ஆ. தண்டைக்கீ ரண்டுரூபாய் கொடுத்தால்
சம்மதமென்று வாதி சொன்னானாம்
அப்படியே ரண்டுரூபாய் கொடுங்கோ இதை
அடக்கஞ் செய்வோ மென்று சொன்னார்கள்
வலையனிடத்திலேயிருந்த நகையை
வாதிக்கிரண்டு ரூபாய் கொடுத்தார்
அந்த வாதிப்பச்சாக் கவுண்டன் தானுமதை
வாங்கியே வீட்டுக்குப்போன பின்பு

42.அ. காசு பணங்கள் கொடுத்ததையு மிந்த
கைதியை விட்டு விட்டார்களென்று
கண்டசமாச்சாரம் சொன்னவனா நாங்கள்
கட்டியனுப்புவோ மென்றார்கள்
நீங்கள் வாங்கினப் பணத்தையும்
விட்ட கைதியையும்
உங்கள் மணியத்துக்குள்படச் சொன்னதுண்டோ
அப்படி நாங்களும் சொல்வதில்லை யென்று
அனைவோர் குடிகளும் அனுப்பி விட்டார்
வந்த பணத்தையும் பங்கிக் கொண்டு அந்த
மணியக்காரரும் போய்வீடு சேர்ந்தார்.

ஆ. சேர்ந்தவுடன் வாதி சுப்பண்ணனும் அதை
தூரதிருஷ்டி வைத்து பார்ப்போமென்று
காகிதமும் சீலிருந்ததுவும் அதுக்கு
கந்தாயம் கைப்பணம் போனதுவும்
நேரிலே தெரியாத ராமன் செய்த
நிபந்தனைகளெல்லாம் மனதில் வைத்து
முன்னும் பின்னுமவன் யோசனை பார்த்திட
ராமனன் சீவனம் போகுதென்று

43.அ. ஆனாலுமாகட்டும் இந்தவேளை ராமன்
அடக்கவேணுமென்று மனதிலேண்ணி
ஐங்காதம் போனாலும் தன் பாவம் தன்னோடே
அவர்களுக்கே சொல்லிச் செய்வோமென்று
வாதிமருமகன் காளிப்ப கவுண்டனை
மருநாள் காலமே போகவிட்டார்
நாங்கள் செய்த காரியம் தப்புதலையென்று
ராசிக்குவரும்படி செய்யுங்கென்றான்
காசு பணங்களும் வேண்டாமிப்போ யென்னோட
காடுளுகும்படி செய்யுங் கென்றான்

ஆ. வந்தாலும் பேச்சுகள் பேசிக்கொள்வோம்
நம்மை வரச்சொல்லி சொன்னாலும்
வாரெனென்றான்
முன்சீப் மணியம் சாமையனிடத்தில் போய்
மோசம் வந்துதென்று சொல்லுமென்றான்
தருமத்தைக் குறித்தவன் மனதில் வைத்து
தயாளமதாகவே சொல்லி விட்டான்
சொல்லிவிட்டா காளியண்ணனும் போயந்த
துகையான சாமைய்யனிடத்தில் வந்து
விட்டகைதிக்கு முங்களுக்குமிப்போ
விளைவந்து சேர்ந்தது சாமியென்றான்

44.அ. என்னடா உங்களையறியா பலிப்பவே
பிடரானியாரடா வென்று கேட்டான்
காடுதருசிட்ட ராமன் கவுண்டனை
காணவேணும் சம்பிறதாய மென்றான்
வத்திலக்கார சுப்பண்ணனுமிப்போ
விடரமுகங்களுக்குச் சொல்லிவிட்டான்
களவுநடந்ததும் குட்டைதரித்தும் நீங்கள்
கைலஞ்சம் வாங்கினது கைகளையும்
கச்சேரியில் பிராதுகண்டு செய்வதற்கு
கண்டுவரச் சொல்லி சொன்னானென்றான்

ஆ. இப்படிச் சொன்னபின் இருவருமாகவே
இணைமணியக்கார னிடத்தில்வந்து
உன்னாலே மோசங்கள் வந்துதடா ராமா
காட்டை உழுகாமல் நீ செய்த . . . . ரிகளாலே
எத்தனை நாள்சென்ற போதிலும்
பழிகளை தீத்துவானென்று நான்சொன்னே
னல்லோ
நேர்த்திகளுமுனக்கு நான் சொல்லியும் புரை
இடுக்கில்வந்து நானும் மகப்பட்டேனே
ஆண்டிவலையனும் வாரதடத்திலே
அயமச்சமாகுமென்று சொன்னதுக்கு

45.அ. மணியக்காரனுக்கு வெத்திலைக்காரனு
வெகுநாள் கொண்டு பழியிருக்கிறது
வரவழைத்து நாமள் பேசிக்கொண்டு
போனால் வழக்கில்லாமல் போகுமென்றதுக்கு
வலையன் சொன்னபேச்சைத் தட்டிவிட்டு நீயும்
வலுக்காரம் சொன்னது மெங்கேயடா
. . . . . ளிசொல்லுறேன் கேளுமடா நம்மிட
காரியங்களெல்லா மெங்கேயென்று

ஆ. இச்செணம் பிராதுகள் செய்வேனென்று சுப்பன்
நிச்செயம் சொல்லிய னுப்பினானாம்
முன்பழி பாவங்களுள் பேரிலிருப்பதை
முகதரவில் கண்டு வருவோமென்றான்
மதிகெட்ட அய்யனே உனக்கேனிந்த புத்தி
வந்தது வரட்டும் நீ இருபோவென்றான்
உனக்குவந்த கிரகம் எனக்குப்பாதியென்று
உண்மைசொல்லிக் கொண்டான் சாமையனும்

46.அ. எந்தப் படித்தவன் பிராதுகள் செய்தாலும்
எங்களுக்குச் சம்பந்தமென்றார்கள்
சேதிக்கொண்டு போனகாளியண்ணன் வந்து
செய்யச்சொன்னார்கள் பிராதுமென்றான்
அப்படியாகட்டுமென்று சொல்லியவனும்
அனுமதியோடே பிருதுகட்கு
வாதியும் முத்துக்கவுண்டனையுமங்கே
மற்றகுடிகளை யோசிக்கவே
வெத்திலைக்காரன் பிழைப்பில்லாமலிங்கே
வீணிலே திரியுருனென்று சொல்லி

ஆ. அப்படியேநானும் திரியுறேனென்று
அடக்கமாயவனும் பதும்பியல்லோ
ஆசாரி சின்னத்தட்டானிடம் போய்அவன்
உன்னிட அனுமதி பிராதுக்கென்ன வென்றான்

இப்படியாக கொற்றக் குடிகளை நம்பிநான்
எப்படிபோவென் பிராதுக்கென்றான்
வாதியும் சாட்சியுமில்லாமல் நான்
வழியறியாமல் பிராது செய்தால்

47.அ. கச்சேரியில் கள்ளப்பிராதென்று சொல்லியே
காவலுங் கைக்குட்டை போடுமென்றான்
சாட்சி சொல்லி என்னை விடுவித்துக் கொண்டான்
சனங்களுமிவ்விடத்திலில்லை யென்றான்
அப்படிவருமென்று எண்ண வேண்டாமிப்போ
அனுமதிக்கு முதல் சாட்சியென்றான்
நீஎப்படி சொன்னாலும் கேட்கிறேனானும்
எனக்கொரு விபரமுந் தெரியாதென்றான்
எண்ணங்கள் வேண்டியதில்லையுனக்கு
எழுந்திரு கூடவே போவே னென்றான்

ஆ. களவுபோன வருஷம் மாசமுந்தேதியும்
கண்டெழுதிய கணக்குங் கையிலெடுத்துக்
கொண்டார்
களவுகள் போனதும் மச்சமெடுத்ததும்
கைதிசெல்லாளை கைகுட்டை போட்டதுவும்
கால்த்தண்டைக்காகவே சின்னத் தட்டானையும்
காவலாக வைத்து விட்டதையும்
கூடியிருவரும் லஞ்சங்கள் வாங்கியே
குட்டை தரித்தவர்கள் விட்டதையும்

48.அ. நடந்த பிரகாரம் பிராதுமெளுதியே
நகைப்பட்டியுங் கூடச்சேர வைத்து
சன்னாமலை மேட்டுப் பாளையத்திலிங்கே
சப்மேஸ்திரட்டுக் கச்சேரியில்
வீர வசந்தராயர் பிள்ளை யவர்களும்
மேஸ்திரி அதிகாரஸ் தானத்துக்கு
ஆனிமாசம் தேதியிரு பத்திரண்டிலே

அன்பான வெள்ளிக் கிழமையினாள்
ஆசாரியேழு திப்பிராது கொண்டுபோய்
அப்பவே தாக்கலுமான பின்பு
தட்டானிடத்திலே வாக்கு மூலங்களை
தப்பாமல் வாங்கென்றார் தாசில்தார்
பிராதில் கண்டபடிக்கு சரிபடாதே போனால்
பின்னுலுங் கோர்ட்டார் சட்டமடா
கைதியும் நீயென்று கைக்கட்டை போட்டு
கம்முட்டி செய்வோ மென்று சொன்னார்கள்

49.அ. என்முன் தருவது எனாதுங்கோ சாமி
இன்ன மவாவர்க்காணு மென்றான்
வாக்கு மூலங்களை வாங்கிக் கட்டியவனை
வரவழைத்த போதுவா போவென்றார்
அச்சமில்லாத் தாசில் தாரரை
ஆந்தரிந்தே பார்க்கும் போதல்லவோ
வலுவில் அதிகாரம் செய்த கிராமத்தில்
(ஒ)ருவருக்கு மூலம் புறக்க வேணுமென்று

ஆ. அகலானவாதி பச்சாக் கவுண்டனையும்
ஆளுவிட்டு நான் கொண்டு வந்து
இதையரிய வேணுமென்று தாசில்தாரரும்
தோளிலே குப்பணி வில்லைவார் போட்டு
தொண்ணையும் கக்கத்தில் வைத்துக் கொண்டு
வாதி பச்சாக் கவுண்டன் வளவெங்கே ஏற்று
வந்தானே மம்முசர் யென்பவனும்
சலுதியாயுனைக் கொண்டு கச்சேரியிலென்னை

50.அ. தாக்கல் செய்யும்படி உத்தரவு
போனார்களிருவருங் கச்சேரிக்கு அங்கே
பொழுது விடிந்தே ராமனிப் படிக்கா
கூட்டிவரச் சொன்ன வாதியை நானும்

கொண்டு வந்தேன் சுவாமி யெற்றவனும்
ஆனிமாதம் தேதி நாளேளிலேயனும்
கொண்டுவந்து அவனை ரட்சணை செய்தான்
அப்பவே வாதியை தான் பார்த்து அந்த

ஆ. அனுமதியுள்ள தாசில்தாரர்
சாதியில் வெள்ளாள் குடியாறவன்டா
சகல உயிர்களுக்கும் உபசாரி
கண்ட சமாசாரம் ஒளித்தவனா யிங்கே
கமுட்டு செய்யும்படி உத்தரவு
கண்ணிலே கண்டு நடந்த கேசுகளை
காணேனென்று சொல்ல வேண்டாமிப்போ
இவ்வித காரியம் உண்டென்று சொன்னாலும்
இடஞ்சல் வந்து சேருமென்றார்கள்
நெஞ்சினில் கவடம் வையாமல் நீயும்
கோர்ட்டில் வாக்கு மூலங் கொடென்றார்

51.அ. அப்படிக்கு நானும் சொல்வதில்லை சாமி
அறிந்த மட்டும் சொல் வேனென்றானும்
சத்தியப் பிரமாணம் சொல்லி வைத்து
வாதியைத் தாசில் தார்தான் கேட்டார்
உன்னிட வீட்டிலே களவுகள் போனதும்
வந்ததும் விபரமென்ன தெரியுமென்றார்
களவு போனதுண்டு மச்ச மெடுத்தங்கே
கைக் குட்டைப் போட்டுத் தரித்ததுண்டு
ஆசாரியெளுதிய பிராதிலுள்ளபடி
அனு மதிதப்பாமலே ளுது வைத்தார்

ஆ. கேசு நடந்தது மாசமென்ன வென்று
கேட்டாரே வாதியை தாசில்தார்
மாசமும் தெரியும் தேதி தெரியாது
மசவெள்ளாளன் சாமியென்றானே

வையாசி மாதம் கடைசியிலே செல்லான்
வலுவில் தொரப்பையுந்தான் முறித்து
திங்கட் கிழமை களவு நடந்தது
சேர்ந்தக் குடிகளுக்குத் தெரியு மென்றான்

52.அ. மச்சமெடுத் தங்கே குட்டைகள் போட்டு
மணியக் காரர் லஞ்சம் வாங்கினதும்
காலத்தண்டைக் காகவே சின்ன தட்டானையும்
காவலாக வைத்து விட்டதையும்
தண்டைக் கீடு ரண்டு ரூபாய் தந்து
தனக்கு நகைகள் கொடுத்ததையும்
எல்லா விவரமும் தகப்பனா யில்லாமல்
எழுதி வைத்தானந்தவாதி யுந்தான்

ஆ. மச்சமெடுத்து நகையுங் கொடுத்து
வந்த ரூபாயிலேரண்டு கொடுக்கும்போது
பக்கமாயிருந்து கண்கண்ட சாட்சிகள்
பார்த்தெழுதி வையுமென்றர்கள்
மச்சமெடுத்தவள் நல்லாயிவென்னிட
மருமகன் காளியப்பக் கவுண்டன்
வெத்திலைக் காரன் ரெண்டுக் குந்த
விபர மெல்லாந் தெரியுமென்
அந்த வெத்திலைக் காரரிருப்பிடம்
பேர்களும் விபரம் சொல்லி யெளுதிவையும் என்றர்

53.அ. பல்லடம் தாலுகா அரசூருமஜார்
பாங்கான தென்னம்பாளையத்தில்
அகமுடையார் குலம் சுப்பதேவன்
அவன் கடவ(ு)கிற கருப்பத்ரிதவள
வெத்திலப் பொதிகளும் கொண்டுவந்து இவர்கள்
விற்பனை இரும்பனா சந்தையிலே
போதும் யெங்கூரு தங்கள் வந்து

இருப்பது நெடுநாளு முண்டு மென்றான்
வட்டல் குறிவைத்து மச்சமெடுத்து
வகையுள்ள நகை யெண்ணிக் கட்டினதும்
குட்டை போட்டதும் கைதியை விட்டதுங்
கூடியே லஞ்சங்கள் வாங்கியதும்

53.ஆ. இந்த நாலு பேரையும் முன்னே வைத்துக் கொண்டு
நடந்த காரியங்கள் சாமியென்றான்
இன்னமும் சாட்சிகள் வேணுமென்றாலு
இருக்குது வெகுசென மென்றாலும்
இந்த ஜனங்களும் போது மடாவுனக்கு
இன்னமும் சாட்சிகள் வேண்டாமென்பர்
ஆடிமாதம் முதல்தேதி விசாரணை
அல்லாரும் செவ்வாய்க் கிழமையினுள்
சாட்சி கூட்டிவரவேணு மென்றேயந்த
தாசில்தார் சொன்ன ருத்தரவு

54.அ. அப்படியே நானும் கூட்டி வாரெனென்று
அனுமதியாகவே வாதி சொன்னான்
திங்கள் கிழமை இரும்பனாச் சந்தைக்கு
ஈசுவானை நீங்கள் விட்டாலும்
வெத்திலைக் காரனும் சந்தைக்கு வருவார்கள்
வேறே ஜனங்களும் ஆஜராக
சாட்சிக்குச் சமன வரும் போதும்
வாதிக்கு தாசில்தார் சொன்ன ருத்தரவு
வாங்கின ரூபாயும் நகையுமந்த செல்லாள்
வலுவில் முறித்த தொப்பையும் நீ

ஆ. சாட்சிக்கு சொல்லவே வருவாருங் கூடவே
தப்பாமல் கொண்டா போவென்றார்கள்
இப்படியே நானும் கொண்டுவா -ரென்று
அனுப்பிக் கொண்டே வாதியும் வந்தான்
வாதியும் வாக்கு மூலங்குடுத்து வா

வாரண்டு புரந்தல்லோ கைதியைத்தான்
கைதி செல்லானையுங் கூட்டிப் போயங்கே
காவல் பாராவினில் வைத்துக் கொண்டு
சாட்சி கூட்டிப் போகச் சேவகன் வந்தான்
சந்தையிணுனங்கே யிரும் பறைக்கி

55.அ. சோவே சாட்சியும் வாதியுங் கூடவே
சேவகன் கூட்டிப் போயொப்பி வித்தாள்
வாதிக்குச் சொல்லிய கட்டளை மேனாத்தி
வந்துதா நகைகளு மென்றார்கள்
கொண்டு வந்தேன் சுவாமி முதலுகளை யெற்று
கும்மிட்டு முன்னாலே கொண்டு வைத்தான்
பட்டியில் கண்ட பிரகாரம் நகையே
பரிசோதனை பண்ணி வைத்துக் கொண்டார்

ஆ. வாக்கு மூலத்திலே கண்ட ரூபாய் ரண்டும்
வலுவில் முரித்த தொரப்ப மென்றான்
சொல்லி விட்டமேனா பட்டியில் கண்ட
சொத்துக்களை முத்தரை போட்டுக் கொண்டார்
வாதியை முன்னே நிறுத்தி வைச்சுக் கொண்டு
வந்த சாட்சிகளைக் கூப்பிடேன்றார்
தாசீல்தாராக சாட்சிக் காரர்களை
சத்தியப் பிரமாணம் சொல்லி வைத்து
அஞ்சு பஞ்ச பூதம் தானறிய நீங்கள்
அறிந்த மட்டும் சாட்சி சொல்லு மென்றான்

56.அ. களவுகள் போறதும் மச்ச மெடுத்ததும்
கைக்குட்டை போட்டுத் தரித்ததுவும்
கால்த் தண்டைக் காகவே சின்னத் தட்டானையும்
காவலாக வைத்து விட்டதையும்
முத்துக் கவுண்டனும் இருபது ரூபாயும்
முன்னாலே வைத்துச் செலுத்தியதும்
மணியக் காரர்களும் வாங்கியே போனதை
வகை துகை தர வைத்தார்

ஆ. அரசமரம் கல்லுக் கட்டுமேலேயந்த
அய்யனு மப்படியே ழுத்தியதும்
நடந்த பிரகாரம் குறைவுகளில்லாமல்
நாலுபேர் சாட்சியு மெழுதி வைத்தார்
பிராதில் கண்டபடி சாட்சிகள் சொல்லவும்
பேதக மில்லாத முனுசிகளும்
தவறாம லெழுதிய வாக்கு மூலங்களை
தாசில்தாரர் முன்னே வாகித்தார்கள்

57.அ. வாக்கு மூலங்களும் பிராது மாச்சியும்
மலைக்கித் துரைகிட்டே அனுப்பி வைத்தார்
கண்டெடுத்துரை வாசனை பார்த்திட
கண்டெளுதுமென் றுத்தரவு
மணியக் காரருக்கு வாறண்டு போட்டு
வாக்கு மூலங்களைக் கேட்டுவிட்டு
கைதியவர்களைக் கேட்டுச் செய்யும்படி
கண்டிப் பாயுத்தரவு யெழுதி விட்டார்

ஆ. அந்த உத்தரவு தாசில்தாரர் பார்த்து
வாரண்டு அனுப்பியே கொண்டு வந்து
ஆடிமாதந்தேதி யிருபத்தியாறினில்
அன்பான சானிவார மன்றைக்குத்தான்
மணியக் காரனாயும் கூட்டிவந்து அங்கே
வைத்தாரேஷ் டேஷன்பாராவினிலே
சாயங் காலநேரம் விசாரணை செய்த
சாட்சிகள் முன்படக் கேட்டார்கள்

58.அ. களவுகள் போனது தெரியாது நாங்கள்
கைலஞ்சம் வாங்கவுமில்லை யென்றார்
வெத்திலைக் கார சுப்பண்ணன் மூலம்
வீண் பிராதாகவே யுண்டு பண்ணி
வாதியைக் கைவசம் பண்ணிக் கொண்டு இது

வந்த பிருதென் சாமையனும்
களவு போன சேதி கலியான வளவிலே
எங்களைக் கண்கண்ட சாட்சிகளுண்ட
குடிகளில் சாட்சிகளிருந்தாலும் நீங்கள்
கோயமுத்தூரிலே கோரிக் கென்றான்

ஆ. கைதியோடே சேர்ந்து கமுட்டு செய்யும்படி
கண்டிப்பாயுத்தரவு வந்து தென்று
ஆவணிமாசம் பதினெட்டாந்தேதி
அல்லோருங் கோராபட்டார் வாசல்முன்னே
தேதி . . . . . . . . . . நீங்கள் . . . . . . . . .
திங்கள் கிழமை விசாரணைக்கு
ஆசரவாகாதே போனதானாலும் உங்களுக்கு
ஆக்கினை அபராதம் தீர்ப்போ மென்று
முச்சிலிக்கை வாங்கிக் கட்டிக்கொண்டு இனத்தை
முடிக்கிவிட்டாரந்த தாசில்தாரர்

59.அ. மணியக்காரர்க்கு ஜாமீன் கொடுத்திட
வாரந்தப்பாமல் போய்ச் சேருமென்றார்
அப்பவே அவர்களும் ஜாமீன் குடுத்திட்டு
அப்பணங் கட்டவே ஊருவந்தார்கள்
ஊர்வந்து சேர்ந்த ஜனங்களெல்லாம்
அவர்கள் நாளெண்ணிக் கொண்டு
தானிருந்தார்கள்
கம்பெனிக் கோட்டார்வாசல் நேராகவே
கூட்டமதாகவே நின்றார்கள்

ஆ. அர்ச்சியில் கண்ட ஜனங்களெல்லாம் நீங்கள்
ஆசரவாவென்ற கேட்டார்கள்
குறைவில்லாமல் நாங்கள் வந்தோமென்று சொல்லி
குறிப்பெழுதிக் கொண்டா னாசார்துரை
குப்பிணிவில்லைச் சேவகனை விட்டு
கூட்டமதாகவே வைத்திரென்றார்

சாயங்கால நேரம் மணிரண்டுக்கு அங்கே
சதுரமீன் கேட்டு துரைகள் வந்தார்
வாதியைக் கூப்பிட்டு கைதியை நிறுத்தியே
வாக்குமூலங்களைக் கேளுமென்றார்

60.அ. அத்தாணி போட்ட கிளிக்கூட்டுக்குள்ளே
யந்த மணியக்காரர்களை நிறுத்தி வைச்சு
குப்பிணி யாருடைய கோர்ட்டு துரைகளும்
கூப்பிடு சாட்சியை யென்றார்கள்
திக்கென்றேருந்திருச்சு நிற்காமலே போய்
நின்றார்கள் கோர்ட்டார் சமூகத்திலே
இந்த கைதிகள் லஞ்சங்கள் வாங்கியதும்
இந்தக் களவு செல்லாளொத்துக்
கொண்டதுவும்

ஆ. நிச்செயம் சொல்லென்று வாக்குமூலங்களை
இங்கே வாங்கென்றார் துரைகளுந்தான்
களவுகள் போனது கைக்குட்டை போட்டதும்
இந்தக் கைதிகள் லஞ்சங்கள் வாங்கியதும்
கேசில் கண்டபடி சாட்சிகள் சொல்லவும்
கெடுவித்தார் துரை செல்லாளுக்கு
எட்டுமாச மெட்டுநாளுங் கெடுவென்று
எழுதச் சொன்னார் துரை முனுசிகளை

61.அ. மணியக்காரனையும் தான்பார்த்து துரைகள்
வாக்குமூலங் கொடுக்கச் சொன்னார்கள்
களவுகள் போனதுந் தெரியாது நாங்கள்
கைலஞ்சம் வாங்கவுமில்லை யென்றார்
அந்தநாள் நாங்கள் கலியான வளவிலே
அறிந்த சாட்சி வந்திருக்குதென்றார்
சாட்சிகள் வேண்டதில்லையென்று துரைகள்
தள்ளுமென்றார் கைதியை கொட்டனாயில்

ஆ. கைதியைக் கூப்பிடு நகையை யொப்பிவைத்து
வழக்கப்படி ரசீது வாங்குமென்றார்
மறுநாள் விசாரணை பண்ணியல்லோ துரைகள்
மணியக்காரருக்கு . . . . . . . மென்றார்
ஆறுநாள் பாராவில் வைத்தது மல்லாமல்
ஆளொன்றுக்கு முப்பது ரூபாயென்றார்
முப்பது முப்பரு ரூபாய் கொடுத்திட்டு
முக்காடிட்டு வெளியில் போக்கணமாய்

62.அ. மதிகளும்கெட்டு மானமும் போயவர்கள்
மறுநாள் போளூரு சேர்ந்தார்கள்
மணியக்காரன் வந்த சேதிகேட்க குடிகள்
வந்துகண்டார்களாம் யெல்லோரும்
அபராதம் போட்டாலும் குற்றமில்லை நாங்கள்
ஆண்மை குலையாமல் வந்தோமென்றார்
பெரியவர்கள் செய்த தருமத்திலே மணியம்
போகாமல் நின்றது

ஆ. கைப்பணம் போனது மல்லாமல் நானும்
கடனாக வாங்கின துகைகளுக்கு
வைப்பான குடிகளெல்லாம் கூடி என்னை
மரியாதை பண்ணவே வேணுமென்று
நல்லதென்று குடிகள் சம்மதிச்சு நாங்கள்
நடப்பித்து கொடுக்கிறோ மென்றார்கள்
. . . . . .ப்பு . . . . . . . . கணக்குப் பிரித்து
ரண்டோடு குடிகளும் தான்கொடுத்தார்

63.அ. வெற்றிலைக்காரச் சுப்பண்ணனும் போய்
. . . . . . . . இல்லையே தான்
. . . . . . . . . . . . . . . . . . . . . பிளைத்து
வீட்டினில் வந்ததைக் கண்டையங்களோ
ராமனை மணியக்காரனென்ற பேர்க்கு
நடக்கும் அபராதம் சர்க்காரிலே

அப்படிச் சொல்லவுங் குடியானபேர்களும்
காசுகுடுக்கவும் கூடாதென்றார்

ஆ. சிவில்கோர்ட்டார் செய்த தீர்ப்புகளை
சீமைதுரையவர்கள் சமூகத்துக்கு
கேசுநடந்ததும் கெடுவுகள் போட்டதும்
.......... மணியஞ் செய்ததையும்
வாக்குமூலங்களும் பிராதும் அர்ச்சியும்
வகையுடனே ரண்டு மறுப்பினர்கள்
அனுப்பின அர்ச்சியும் வாசனையும் பார்த்து
துரைகள் - அப்பவே எழுதினாருத்தரவு

64.அ. இப்படி மணியங்கள் வேண்டாமென்று நாம்
எடுத்தெரிச்சு போட்டோமென்று சொல்லி
ஒட்டுத்தரவு தானெளுதி துரைகள்
உடனே கச்சேரிக்கனுப்பி வைத்தார்
சாமைய்யன் கவுண்டன் மணியங்கள்
தள்ளிவிட்டா ரென்று சொல்லியுந்தான்

ஆ. உத்தரவுவந்து கிராமத்துக் கணக்கையன்
உள்ளூரு குடிகளை வைத்துக்கொண்டு
வாசித்துக் கொடுக்கவும் கண்டார்கள் அந்த
மணியத்துக்குச் சேர்ந்த குடிகளெல்லாம்
தெரியாத மணியம் செய்வதற்கு
இப்படித்தான் வாரும் பாருங்கையா
ஆகபோகந் தெரியாத மணியங்கள்
ஆர் செய்தாலுமிது தப்பாது

65.அ. ஏகபோகமாயிருக்க வேணும் குடியை
எல்லோரைக் காத்து லட்சிக்கோணும்
......... மணியம் ஆர்செய்தாலும் இந்த
கேடுவருவது தப்பாது
முளைப்பில்லுங் கலைத்தண்ணி தடுக்குமென்று

இப்போ - முன்னோர்கள் சொல்படி கேட்டிருந்தும்
அறிவில்லாதருமன் மணியம் போனவிதம்
அறிந்துகொள்ளும் நீங்கள் ஜனங்களெல்லாம்

ஆ. உன்வாயில் வைத்த மெளுகது போல
உருகிடவே ராமனுந்தான்
கவியாலே பாடின பாலனை நீங்கள்
கார்த்து ல(ர)ட்சிக்க வேணுமய்யா
புவிதனிலுள்ள பெரியோர்களிதைக் கேட்டு
போற்றி விடைதர வேணுமையா
நடந்த பிரகாரம் தொச்சமில்லாமலே
நாட்டினார்க்கு கும்மியாய் பாடிவிட்டேன்

66.அ. எழுதின கும்மியை யெடுத்துப் படித்தாலும்
எல்லா விபரமுந் தெரியவரும்
கரிமுகன் வாழி - கடவுள் வாழி இன்னம்
கருப்பருயன் சுவாமிதான் வாழி
கலைமகள் வாழியுமைவாழி யந்தக்
கதைதனைக் கேட்ட ஜனங்கள் வாழி
செங்கப்பள்ளி மாரியம்மன் வாழி இன்னம்
சேர்ந்த கவுண்டர்கள் சாமி வாழி

ஆ. குலதெய்வம் குடிதெய்வம் வாழியின்னம்
குவலயத்தில் முனியோர்கள் வாழி
உள்ளூர் மணியம் கணக்கர்வாழி இன்னம்
ஊரிலுள்ள ஜனங்கள்தான் வாழி
இருப்பனாச்சந்தை முகதாவி லெனக்கு
இருபத்தினாலு கிராமத்திலும்
மற்ற குடிகளுந்தான் வாழி
ஆகுகாலத்திலே அறிவுள்ள ஞாயங்கள் - அனுமதி
யோடே படிப்பிவித்த - அருகம்பாளையங்
குடியிருக்குமந்த - அந்த நாரியப்ப கவுண்டன் வாழி
அனைவோர் குடிகளும்தான் வாழி இன்னம்
அகமுடையார்குலம் வாழி வாழி!

# பாடல் முதற்குறிப்பு அகராதி


| | பாடல் அடி | பாடல் எண் |
|---|---|---|
| 1. | அகலானவாதி | 49 (அ) |
| 2. | அத்தனை பேருக்கு | 20 (அ) |
| 3. | அத்தாணி போட்ட | 60 (அ) |
| 4. | அதை எப்படி | 15 (அ) |
| 5. | அந்தக் காட்டையுழுது | 25 (ஆ) |
| 6. | அந்த உத்தரவு | 57 (ஆ) |
| 7. | அப்படி யாக்கொற்ற | 16 (அ) |
| 8. | அப்படி யானாலும் | 23 (ஆ) |
| 9. | அப்படி நானும் | 46 (ஆ) |
| 10. | அப்படிக்கு நானும் | 51 (அ) |
| 11. | அப்படியே நானும் | 54 (அ) |
| 12. | அரசூரதனில் | 1 (ஆ) |
| 13. | அரசமரம் | 36 (அ) |
| 14. | அர்ச்சியில் | 59 (ஆ) |
| 15. | அல்லாருங் | 24 (ஆ) |
| 16. | அல்லாருங்கூடியே | 40 (அ) |
| 17. | அவரையும் | 2 (ஆ) |
| 18. | அவனிட்ட வேளாண்மையை | 27 (ஆ) |
| 19. | அவன் எந்த | 28 (அ) |

| | | |
|---|---|---|
| 20. | அவள் போட்டிருந்த | 29 (அ) |
| 21. | அனுமதியுள்ள | 50 (ஆ) |
| 22. | ஆசாரி சின்னத்தட்டானாலே | 39 (அ) |
| 23. | ஆனாலுமா கட்டும் | 43 (அ) |
| 24. | இச்செணம் பிராது | 45 (ஆ) |
| 25. | இது வெந்தவிதமோ | 3 (ஆ) |
| 26. | இந்த மாதுவானவள் | 20 (அ) |
| 27. | இந்த நாலுபேரையும் | 53 (ஆ) |
| 28. | இப்படி முன்னிருந்தாலு | 26 (அ) |
| 29. | இப்படி ராமனும் | 17 (அ) |
| 30. | இப்படி நீங்களும் | 16 (அ) |
| 31. | இப்படி சொன்னபின் | 44 (ஆ) |
| 32. | இப்படி | 64 (அ) |
| 33. | இருவரும் அதிகாரம் | 8 (ஆ) |
| 34. | இருவரும் கூடியே | 6 (ஆ) |
| 35. | உங்கள் பண்ணு | 21 (அ) |
| 36. | உத்தரவு வந்து | 64 (ஆ) |
| 37. | உன் வாயில் | 65 (ஆ) |
| 38. | ஊரு சனமெல்லாம் | 26 (ஆ) |
| 39. | எந்த விதத்திலே | 23 (அ) |
| 40. | எந்தப் படித்தவன் | 46 (அ) |
| 41. | எப்போதும் நீங்கள் | 38 (அ) |
| 42. | எழுதின கும்மியை | 66 (அ) |
| 43. | என்னடா | 44 (அ) |

| | | |
|---|---|---|
| 44. | என்முன் தருவது | 49 (அ) |
| 45. | ஏகபோகமாயிருக்க | 65 (அ) |
| 46. | கச்சேரியில் | 47 (அ) |
| 47. | கடுக்காய்மணி | 36 (ஆ) |
| 48. | கண்களும் மங்கியே | 7 (ஆ) |
| 49. | கந்தாயக் காரன் | 5 (ஆ) |
| 50. | கவுண்டனூரில் | 25 (அ) |
| 51. | களவுகள் போன | 47 (ஆ) |
| 52. | களவுகள் போனது | 58 (அ) |
| 53. | களவுகள் போறதும் | 56 (அ) |
| 54. | களவுகள் போன | 37 (அ) |
| 55. | காசு பணங்கள் | 42 (அ) |
| 56. | காடுநாக வேண்டா | 18 (அ) |
| 57. | காலிலே | 8 (அ) |
| 58. | காலமே மணியக்காரனை | 31 (அ) |
| 59. | கிராமத்துக் கதிகாரி | 4 (ஆ) |
| 60. | குடிகளில் | 6 (அ) |
| 61. | குடிகள் அந்த | 19 (அ) |
| 62. | குல தெய்வம் | 66 (அ) |
| 63. | குடிகளே | 14 (ஆ) |
| 64. | கேசு நடந்தது | 51 (ஆ) |
| 65. | கைதியைக் கூப்பிடு | 61 (ஆ) |
| 66. | கைதியோட சேர்ந்து | 58 (ஆ) |
| 67. | கைப்பணம் போனது | 62 (ஆ) |

| | | |
|---|---|---|
| 68. | கையெடுத்து போடுமென்று | 11 (அ) |
| 69. | கையிலே ரூபாய் | 40 (ஆ) |
| 70. | கொஞ்ச நாளைக்குள்ளே | 12 (அ) |
| 71. | சக்தி பத்தி | 2 (அ) |
| 72. | சட்டப்படிக்கு | 34 (அ) |
| 73. | சட்டிக்குள்ளே | 30 (ஆ) |
| 74. | சண்டை வழக்குகள் | 7 (அ) |
| 75. | சந்தைக்குப் போன | 30 (அ) |
| 76. | சாட்சிக்கு சொல்லவே | 54 (ஆ) |
| 77. | சிவில் கோர்ட்டார் | 63 (ஆ) |
| 78. | சேதிக் கொண்டு போன | 35 (ஆ) |
| 79. | சேர்ந்தவுடன் | 42 (ஆ) |
| 80. | சோவே சாட்சியும் | 55 (அ) |
| 81. | தண்டைக்கீ ரண்டு | |
| 82. | நஞ்சன் பழனிமேல் | 15 (ஆ) |
| 83. | நடக்கிது சாமி | 9 (அ) |
| 84. | நானொரு | 33 (அ) |
| 85. | நிச்செயம் சொல்லென்று | 60 (ஆ) |
| 86. | நீ சொன்னபடி | 17 (ஆ) |
| 87. | பத்துபேர் குடிகளும் | 5 (அ) |
| 88. | பல்லடம் | 53 (அ) |
| 89. | பாட்டுகள் ஆனதும் | 4 (அ) |
| 90. | புவிதனில் | 3 (அ) |
| 91. | பெரியவர்கள் செய்த | 24 (அ) |

| | | |
|---|---|---|
| 92. | மச்சமெடுத்து முடிப்போடே | 34 (ஆ) |
| 93. | மச்சமெடுத்தங்கே | 52 (அ) |
| 94. | மச்சமெடுத்து | 52 (ஆ) |
| 95. | மணியக்காரனையும் | 61 (அ) |
| 96. | மணியங்களாவது | 9 (ஆ) |
| 97. | மணியங்கள் | 11 (ஆ) |
| 98. | மணியக்காரன் | 18 (ஆ) |
| 99. | மணியக்காரனுக்கு | 33 (ஆ) |
| 100. | மணியக்காரனுக்கு | 45 (அ) |
| 101. | மதிகளும் கெட்டு | 62 (அ) |
| 102. | மாதுவான குடிகள் | 13 (ஆ) |
| 103. | முண்டை தண்டைகளை | 13 (அ) |
| 104. | முத்துக் கவுண்டனால் | 41 (அ) |
| 105. | முந்தி முந்தி விநாயகனே | 1 (அ) |
| 106. | முனிசீபு மணியம் | 22 (அ) |
| 107. | முனுசீபு மணியம் | 38 (ஆ) |
| 108. | வட்டல் குறி | 31 (ஆ) |
| 109. | வலையனிடத்திலே | 35 (அ) |
| 110. | வாக்கு மூலத்திலே | 55 (ஆ) |
| 111. | வாக்கு மூலங்களும் | 57 (அ) |
| 112. | வாராமல் | 28 (ஆ) |
| 113. | வெத்திலைக்காரன் | 27 (அ) |
| 114. | வெற்றிலைக்காரச் | 63 (அ) |